Inaugural Newsletter
December 8, 2017

## Maithree - a banyan tree *Page 1*

Aruna writes about how Maithree is a banyan tree that provides refuge and shelter for our special children

## The service begins *Page 2*

Read on to see the story of Maithree

## How Maithree empowered a young boy *Page 3*

Aruna beautifully pens how one differently abled boy flourishes after joining Maithree by taking care of himself to weaving impeccable mats. Saravanan has set a great example to all of us.



From the Secretary's Desk

# Maithree

An Organization for Exceptional Children
www.maithree.org

## Introducing the pillars of Maithree




## Reach of Maithree

சிறு விதையின் மூலம்
சின்னஞ் சிறு
செடியாக துளிர்த்து
பூகாய் கனிகளை
வழங்கி...
ஒரு மரமாக வளர்ந்து...
பல பறவைகளுக்கு
இடமளித்து...
அவைகள் மூலம்
மீண்டும் விதைகளை
விதைத்து...
இன்று ஒரு பெரிய
ஆலமரமாக பல கிளைகளை
விரித்து....
எண்ணிலடங்கா பறவைகளின்
புகலிடமாக இருக்கும்
மைத்ரியின் சேவைகள்
ஆண்டாண்டு காலம்
அனைவருக்கும் கிடைக்க
ஆண்டவனைது திப்போம்.

### *THE BEGINNING*

A humble beginning of providing special education to three children from the drawing room of a parent, MAITHREE has grown to provide an array of services to around 480 Children through its nine day-care service centers situated at Perambur, Tambaram, West, Tambaram East, West Mambalam, K.K.Nagar, Moolakkada and Ullagaram Medavakkam and Kodambakkam.

It gives me immense pleasure to connect with all the members through this e-Newsletter which has been a dream project for all of us at Maithree to connect with every stakeholders of Maithree apprising them the happenings and the plans of Maithree towards achieving our goal of providing a secured future to all children with special needs.

We hope to reach out to all the members and well-wishers through this on a monthly basis.

In the initial few issues we will concentrate on elaborating the various objectives of Maithree, its current status and the way forward to enable all members and well-wishers to understand Maithree at a deeper level and associate whole heartedly in this noble cause.

We will try and keep this interesting and relevant to all our needs and request an active participation and response to the various notices that would be published time to time in this forum.

I also take this opportunity to thank the editorial team who have come forward to be the links to connect all stakeholders of Maithree.

Kind Regards,
P. John Rajkumar
Hon. Secretary

# மைத்ரி சேவையின் ஆரம்பம் !!!

அவர்களின் முதல் குழந்தைக்கு முதல் வயது ஆகப் போகும் நிலையிலும் கழுத்து நிற்கவில்லை. மேலும் அவன் மற்ற குழந்தைகளை போலவும் அவர்களுக்கு தெரியவில்லை. ஆனால் குழந்தை நலமருத்துவர் அவன் சரியாகி விடுவான் என்ற உறுதியை அளித்துக் கொண்டிருந்தார். ஆனால் அவன் முதல் பிறந்த நாள் அன்று தான் அவன் தன் வாழ்நாள் முழுவதும் இப்படித்தான் இருப்பான் என்ற உண்மை அவர்களுக்கு தெரிய வந்தது. மற்றொரு குழந்தை நல மருத்துவர் தான் இந்த உண்மையை கூறினார்.

மேலும் இவர்கள் இவனைப் போன்ற சிறப்புக் குழந்தைகளை பற்றி அறியாதவர்கள். அதனால் அவர்களுக்கு இனி வாழ்க்கையில் ஒன்று மில்லை என்ற விரக்தி ஏற்பட்டது. ஆனால் மற்றொரு குழந்தை நல மருத்துவர் டாக்டர் சாகோ அவர்களுக்கு உதவினார். அவர் அக்குழந்தையை உடனடியாக ஸ்பாஸ்டிக் சொஸைட்டியில் சேர்த்தார். அன்றிலிருந்து அவர்கள் வாழ்வில் புதிய பயணம் தொடங்கியது. அக்குழந்தையை மையமாக வைத்தே அவர்களின் நாட்கள் நகர்ந்தன. அவன் படுத்த படுக்கையாக முற்றிலும் உதவி தேவைப்படும் நிலையில் இருந்தான்.

இந்நிலையில் அவர்களுக்கு இரண்டாவதாக பெண் குழந்தை பிறந்தது. கருவுற்றது முதல் பிறப்பு வரை அனைத்து சோதனைகளும் செய்யப்பட்டது. 4 மாதங்கள் ஆகியும் அக்குழந்தை கவிழாத காரணத்தால் குழந்தைகள் நரம்பியல் மருத்துவரிடம் காண்பித்தனர். அவர் இக்குழந்தைக்கும் மரபியல் பிரச்சனை இருப்பதாக தெரிவித்தார். அது 1991ம்ஆண்டு. அதற்கு பிறகு தங்கள் குழந்தைகளுக்கு தேவையான சரியான ஆதரவை தேட தொடங்கினர் 1994 ம் ஆண்டு இதைப் பற்றி Prof.ஜெயசந்திரனிடம் ஆலோசனை செய்தனர். அவர் தான் இவர்களை மைத்ரிக்கு அறிமுகப்படுத்தினார். மைத்ரி ஒரு பெற்றோர் சங்கம். சிறப்புக் குழந்தைகளின் நலனுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என முயற்ச்சி செய்து கொண்டிருப்பதாகவும் கூறினார். மைத்ரியின் செயலாளர் திரு.ராஜ்குமார் அவர்களை சந்தித்து தங்கள் வீட்டிலேயே ஒரு சிறப்புப் பள்ளி தொடங்கலாம் என அவர் கூறினார். அவரின் வேண்டுகோளின் படி மூன்று மாதங்களிலேயே அவர் வீட்டின் வர வேற்பறையில் 3 குழந்தைகளுடன் மைத்ரி சிறப்புப் பள்ளி தொடங்கப்பட்டது.

இவ்வாறு மைத்ரியின் முதல் கிளை உருவாக வித்திட்டவர் யார் தெரியுமா? அவர்கள் தான் நம் அனைவரின் அன்புக்குரிய **திரு. சிராஜ் மற்றும் திருமதி சிராஜ் தம்பதி.**

பெரம்பூரில் திரு மற்றும் திருமதி சிராஜ் அவர்கள் வீட்டின் வரவேற்பறையில் தொடங்கப்பட்டது தான் மைத்ரியின் முதல் சிறப்புப்பள்ளி. அன்றிலிருந்து இன்று வரை **மைத்ரிக்கு முன்னேற்றமே!!!**



Saravanan at work at Maithree's Vocational Training Center

## Calendar of events

Dec 17
Parent Teacher meetings

Dec 23
Christmas Celebrations

## Newsletter Editorial Team

Sharanya Ganesh

Aruna Sanjay

Sridevi Sriram

Anburaj A

Lakshmi Rajaram

Jaya Murali

## For feedback, comments and article submission:

Email at
mail.maithree@gmail.com

# Economic Empowerment at its best

சரவணன், 1998ம் ஆண்டு மைத்ரியின் இரண்டாவது கிளையில் இரண்டாவது குழந்தையாக சேர்ந்தவன். முதல் குழந்தை நம் அனைவருக்கும் தெரிந்த மறைந்த ஜோத்ஸனா. அவன் பிறந்ததும் அவனை குழந்தைகள் நலமருத்துவரிடம் காட்டிய போது அவர்தான் இவனை ஒரு சிறப்புக் குழந்தை என அடையாளம் காட்டினார். இவன் ஒரு சிறப்பக் குழந்தை என்பதால் இவனால் ஆகப் போவது என்ன என்ற உறவினர்கள் அவனை உதாசீனப்படுத்தினர். இருப்பினும் மனம் தளராமல் அந்த தாய் தன் மகனை சாதிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தன் முயற்ச்சியை விடாமல் தொடர்ந்தார். அதன் பயனாக அவர் மதுரம் நாராயணன் சென்டரில் திருமதி பிரியாராஜ்குமார் அவர்களை சந்தித்தார். அவரின் அறிவுரையின் படி 1998 ம் ஆண்டு மேற்கு தாம்பரத்தில் உள்ள மைத்ரியின் கிளையில் சரவணன் சேர்ந்தான். அவன் தாயும் உதவி ஆசிரியையாக அதே பள்ளியில் சேர்ந்தார்.

பள்ளியில் நல்ல முன்னேற்றத்தை காட்டிய சரவணன், 2006 ம் ஆண்டு தொழிற் பயிற்ச்சி மையத்தில் சேர்ந்தான் அங்கும் அவன் எல்லா வேலைகளையும் நன்கு கற்றான். அவன் தாயும் அவனுடன் தொழிற் பயிற்ச்சி மையத்தின் பொறுப்பாளராக சேர்ந்தார். அவர் வேறு யாருமல்ல இப்போதும் பொறுப்பாளராக தன் சேவையை செவ்வனே செய்து வரும், நாமெல்லாம் நன்கு அறிந்த **திருமதி சங்கரி** அவர்கள் தான். தன் குழந்தைக்கு மட்டு மின்றி மற்ற குழந்தைகளும் எல்லா வேலைகளையும் திறம்பட செய்ய கற்றுத்தருகிறார். ஒரு முறை மக்கள் தொலைக்காட்சியில் *Door Mat* செய்வது பற்றிய நிகழ்ச்சியை பார்த்து திரு.ராஜ்குமார் அவர்களிடம் *Mat weaving machine* வாங்கித் தரும்படி கேட்க அவரும் வாங்கித்தந்தார். அதையும் குழந்தைகளுக்கு கற்றுத்தந்தார். மேலும் *Tailoring Diploma* படித்திருப்பதால் குழந்தைகளுக்கு *Tailoring* கற்றுத்தந்தார். அதன் விளைவாக *Ford Company* ஆர்டர் எடுத்து *Hand Sleeve* தைத்துக் கொடுத்து, இப்போது அது ஒரு நிரந்தர வேலையை குழந்தைகளுக்கு ஏற்படுத்தி தந்தது மட்டுமின்றி மைத்ரிக்கும் நிரந்த வருவாய் ஏற்படுத்தியது. இவர்களாலும் வருவாய் ஈட்ட முடியும் என்ற நம்பிக்கையை மைத்ரிக்கு தந்த குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையில் மைத்ரியும் அவர்களுக்கு மாதா மாதம் ஊக்கத் தொகை அளித்து கவுரவிக்கிறது.

இவனால் என்ன செய்ய முடியும் என்று உதாசீனம் செய்த உறவினர்களின் வாக்கை பொய்யாக்கி தன் முதல் ஊக்கத் தொகையில் அவர்களுக்கு புடவை பரிசளித்து அவர்களிடம் ஆசியும் பெற்று இவனாலும் முடியும் என்பதை சாதித்து காட்டினான் சரவணன். அவனது முன்னேற்றத்தை கண்டு உறவினர்களும் தங்களுக்குள் ஒருவனாக அவனை ஏற்றுக் கொண்டனர்.

தன் போன்ற தாய் மார்களிடம் அவர் கேட்பது இது போன்ற குழந்தைகளை பொறுமையாக அன்பாக கையாள வேண்டும். அவர்களை புரிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு உரிய மரியாதையை அளிக்க வேண்டும். முக்கியமாக அவர்களால் என்ன செய்ய முடியும் என்பதை கண்டறிந்து அதில் அவர்களுக்கு நம்பிக்கையுடன் பயிற்ச்சி அளித்தால் அவர்களாலும் சாதிக்க முடியும் என்பது தான்.

***நம்பிக்கை தான் வாழ்க்கை!!!***